போடு ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம், ஒரு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் ஆகிறது. அதிலே 150 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மருந்தகம், குடியிருப்போடு கட்ட வேண்டும் என்கிறபோது ஆண்டுக்குச் சில—அவர்கள் கொடுக்கிற இடம், பத்தாயிரம் கொண்டு மருந்தகத்தைக் கட்டுவது—ஆறு . படுக்கைகள் உள்ளதாக—என்று தீர்மானித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் செயல்படும்.

வடக்கலூர் அரிசனங்களிடமிருந்து முறையீடு

* 648 வினு—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினுசி வட்டம், வடக்கலூர் அரிசன மக்கள், அங்கு கட்டப்பட்டு வரும் பொது மண்டபம் (Community Centre) முடிக்கப் பெருமல் இருப்பது குறித்தும், தங்களுக்குக் குடியிருப்புகள் ஒதுக்குவது குறித்தும், 12—8—1973-ல் மாண்புமிகு அமைச்சரிடம் விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினு எழவில்லை.

மீன் வளப் பயிற்சி.

* 649 வினு—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மீன் வளத்தைப் பெருக்கவும், மீன் பிடிப்பதில் புதிய முறைகளை கண்டறியவும் 1973-ல் தமிழ்நாடு அரசின் சார்பில் நார்வே, சுவீடன் போன்ற நாடுகளுக்கு யாராவது அனுப்பப்பட்டார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. நா. வீராசாமி : நார்வேக்கும், சுவீடனுக்கும் மீனவர்களைச் சேர்ந்த மெம்பர்களை அனுப்பிக் கேர்ந்துவரக்கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். இப்போது நம் நாட்டில் மீன் இலாக்கா திறமையாகச் செயல்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது சட்டசபையில் இருக்கக்கூடிய மெம்பர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலம் இந்த நாட்டின் மீன் வளத்தைப் பெருக்க நம் அரசு முயற்சிக்குமா ?